**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.**

**5, 9, 10** எதிரிகள் ஆஜர் இல்லை**. 5, 9, 10** எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**

**3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>**Crl.M.P.No. 323/2024, 324/2024** மனுக்களில் பிறந்த உத்தரவின் அடிப்படையில் சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகுதான் நான் எனது புலன்விசாரணையை தொடங்கினேன். இவ்வழக்கின் புகார், அ.சா.1 கைப்பட எழுதிய புகார் என்றால் புகாரை வாங்கிய உதவி ஆய்வாளரிடம்தான் அதைப்பற்றி கேட்க வேண்டும். நான் முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் புகார் நகல் ஆகியவற்றை படித்து பார்த்தபிறகுதான் புலன்விசாரணையை துவங்கினேன். முதல் தகவல் அறிக்கையில், காவல் உதவி ஆய்வாளர் பெரியசாமி ஆகிய என்பவருக்கு தகவல் கிடைத்து அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்று, அங்கிருந்த சஸ்மிதா என்பவர் அளித்த புகாரைப்பெற்று, திரும்பி வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரித்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. உதவி ஆய்வாளரிடம் விசாரித்தபோது, புகாரை யார் எழுதினார்கள் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் ஞாபகமில்லை. புகாரில் எதிரிகள் சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தனர் என்று ...........

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் இரண்டு எதிரிகள் பெயர் குறிப்பிட்டு, மற்ற இரண்டு பெயர் தெரியாத நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெயர் தெரியாத இரண்டு நபர்களின் வயது, அங்க அடையாளம் உள்ளிட்ட சிறப்பு அடையாளங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அஜீத்குமார் என்பவரின் பெயர் புகாரில் குறிப்பிடப்பட்டு, அவர் இறந்த நபரின் உடலில் எந்தெந்த இடங்களில் எந்த ஆயுதத்தை வைத்து காயங்களை ஏற்படுத்தினார் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 18.09.2020 அன்று மதியம் சுமார் 1.00 மணிக்கு கரூர், அரசு மருத்துவமனையில் வைத்து அ.சா.1, அ.சா.2 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் 18.09.2020 அன்று காலை 9.15 மணிக்கு அப்பல்லோ மருத்துவமனையில் விபத்து பதிவேட்டு நகல் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டு நகலில் தினேஷ் என்ற சகோதரரால் கிருஷ்ணமூர்த்தி என்ற நபர் அழைத்து வரப்பட்டார் என்றும், இளநீர்கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் வெட்டப்பட்டார் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட கிருஷ்ணமூர்த்திக்கு சிகிச்சை அளித்துள்ள மருத்துவரும் அதை பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டு நகல் காலை 9.15 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்து சிகிச்சை பதிவேடும் காலை 9.15 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட கிருஷ்ணமூர்த்திக்கு அப்பல்லோ மருத்துவமனையில் எவ்வளவு நேரம் சிகிச்சை அ ளிக்கப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். 18.09.2020 அன்று காலை 9.15 மணி முதல் 10.52 மணிவரை சிகிச்சையளிக்கப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேன். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் உடல் அரசு மருத்தவமனையில் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் 18.09.2020 அன்று முற்பகல் 11.30 மணிக்கு கரூர், அரசு மருத்துவமனையில் அவருடைய உடல் பெறப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளர் அ.சா.1 யிடமிருந்து காலை 11.00 மணிக்கு புகாரைப்பெற்று, காலை 11.15 மணிக்கு நிலையத்திற்கு வந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் பிரேதம் அரசு மருத்துவமனையில் பெறப்பட்டபோது, அடையாளம் தெரியாத நபரால் வெட்டப்பட்டு இறந்தார் என அவரது மனைவி தெரிவித்தார் என பதிவு செய்யப்பட்டுள்ளது. புலன்விசாரணை துவங்கியபிறகு, அப்பல்லோ மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அந்த விபத்து பதிவேட்டு நகலில் தினேஷ் என்பவர் கிருஷ்ணமூர்த்தியை மருத்துவமனையில் சேர்த்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 சஸ்மிதா பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளரிடம் தினேஷ் என்பவர் அளித்த புகார் வாக்குமூலம் பெறப்பட்டு, அவரிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றும், அந்த வாக்குமூலம் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தினேஷ் என்பவர் அளித்த வாக்குமூலம் வழக்கின் உண்மையான புகார்வாக்குமூலம் என்றும், அ.சா.1 யிடமிருந்து பெற்ற வாக்குமூலம் குவிமுச பிரிவு 162 ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகாரில், எதிரிகள் தனக்கு தெரிந்த நபர்கள் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 அளித்த புகார் பின்னிட்டு காவல்நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டு நகல் மற்றும் பிரேதத்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது பதிவு செய்யப்பட்ட தகவலின்படி, யாரால் குற்றம் நிகழ்ந்தது என தெரியாது என்றால் சரிதான். அப்போது விசாரணை ஆரம்பிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 என்னிடம் அளித்த வாக்குமூலங்களில், சம்பவ இடத்தில் பிரவீன் இருந்தார் என கூறவில்லை என்றால் சரிதான். அதே வாக்குமூலத்தில் பிரவீன் சம்பவ இடத்தில் இருந்தார் என கூறியுள்ளார். அ.சா.3 வாக்குமூலத்தில், தினேஷ் என்பவரை பற்றி கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.2 பெரியசாமி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், அ.சா.34 தினேஷ் சம்பவ இடத்தில் இருந்தார் என கூறவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் குவிமுச பிரிவு 161-ன் கீழான வாக்குமூலங்களை நான் சொல்ல சொல்ல கணிணி காவலர் பதிவு செய்தார். அ.சா.34 என்னிடம் அளித்த வாக்குமூலத்தில், உயிருக்கு போராடிக்கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியை தானும், சஸ்மிதாகவும் அப்பல்லோ

மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றபோது, பிரவீனும், பெரியசாமியும் அந்த இடத்தில் இருந்தனர் என்று சொல்லவில்லை என்றால் மேற்சொன்ன விவரம் அ.சா.*34* சாட்சியத்தில் சொல்லப்படவில்லை என்பதால் மேற்சொன்ன கேள்வி தொடர அனுமதியளிக்கப்படவில்லை. அ.சா.34 தினேஷ் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் தான் 9.10 மணிக்கு வீட்டிலிருந்தபோது, நான்கு எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு, அவர்களால்தான் சம்பவம் நடந்தது என்று தன்னிடம் சஸ்மிதா சொன்னதாக என்னிடம் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் மேற்சொன்ன விவரம் அ.சா.*34* சாட்சியத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால், மேற்சொன்ன கேள்வி தொடர அனுமதிக்கப்படவில்லை. அ.சா.1 சஸ்மிதா, அ.சா.34 தினேஷ் ஆகியோரின் செல்போன் அழைப்பு விவர அறிக்கையை பெற்று, நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்திலிருந்து அப்பல்லோ மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியை கொண்டு சென்ற ஆம்புலன்ஸ் ஓட்டுநர் யாரென்றும், அவருடைய செல்போன் அழைப்பு விவர அறிக்கை, ஆம்புலன்சின் ட்ரிப் சீட் ஆகியவற்றை துலக்கி, ஆம்புலன்ஸ் ஓட்டுநரை நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி மட்டும்தான் இருந்தார் என்றும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவி மற்றும் குடும்பத்தினர் தினேஷ் தகவல் சொன்ன பிறகுதான் அப்பல்லோ மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தி இறக்கும் தருவாயில் வந்து சேர்ந்தனர் என்றும், அதனால்தான் 18.09.2020 அன்று காலை 9.15 மணிக்கு அப்பல்லோ மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகலில் தினேஷ் என்பவர் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் ஓட்டுநர் பற்றிய முழுத்தகவலும் எனக்கு தெரியும் என்றும், அவரை விசாரித்தால் சம்பவ இடத்தில் யார் இருந்து ஆம்புலன்சில் ஏற்றினார்கள் என்ற விவரம் தெரிந்து, அது வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. தினேஷ் என்பவர் முதன்முதலில் அளித்த புகார் வாக்குமூலம் வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்பதால் மறைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று இளநீர்கடை போடப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில், சம்பவ இடத்திற்கு ......

அருகில் உள்ள இளநீர்கடைக்காரர்கள் கோவிந்தராஜ், அவர் மனைவி மணியம்மாள், கார்த்திக் மற்றும் சிலர் கூடியிருந்தார்கள் என தெரிந்துக்கொண்டேன். சம்பவ இடத்தில் வேறு யாரும் கூடவில்லை என்பதால்தான், இறந்துபோனவரின் மனைவி, பெற்றோர் மற்றும் உறவினர்களை சாட்சியாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பொங்கல் விழா, எந்த ஊரில், எந்த தேதியில், யாரால் நடத்தப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் டீச்சர்ஸ் காலனியில் பொங்கல் விளையாட்டு போட்டி நடைபெற்றது என்று தெரிந்துக்கொண்டேன். எந்த தேதி விழா நடந்தது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால்தேதி ஞாபகமில்லை. பொங்கல் விழாவை யார் நடத்தினார்கள் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் காலனியை சேர்ந்த எல்லோரும் நடத்தினார்கள் என்று தெரிந்துக்கொண்டேன். விழா நடத்துவதற்கு காவல்துறை அனுமதி, ஒலிபெருக்கி அனுமதி கேட்டு யார் மனு கொடுத்தார்கள் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. பொங்கல் விழாவில் சண்டை எதுவும் நடந்ததா என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் விசாரணையில் தெரிந்துக்கொண்டேன். அதுகுறித்து குறிப்பிட்டு யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் சொல்வதுபோல் விழா எதுவும் நடக்கவில்லை என்றும், 1ம் எதிரிக்கும், இறந்துபோனவருக்கும் இடையே எந்த சண்டையும் ஏற்படவில்லை என்றும், அவர்களுக்குள் எந்த முன்விரோதமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1, 4 எதிரிகளுக்கும், இறந்துபோன கிருஷ்ணமூர்த்திக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றும், 18.09.2020 அன்று காலை கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்பட்ட காயத்திற்கும், 1 மற்றும் 4 எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையான குற்றவாளி யாரென்று தெரியாத காரணத்தினால்தான், அஜீத்குமார் என்ற பெயர் சொல்லி, பின்னர் தெரியாமல் அவர் பெயர் கூறப்பட்டது என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர் காவல்நிலையத்தில் வைத்து, மேலதிகாரிகளுடன் ஆலோசனை செய்யப்பட்டு, வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உண்மையான ஆவணங்கள் மறைக்கப்பட்டுள்ளது என்றும், ஜோடனை செய்யப்பட்டு ஆவணங்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**2, 8, 9, 12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில், சம்பவ இடத்தில் 18.09.2020 அன்று காலை 9.00 மணியளவில் அ.சா.3 பிரவீன் இருந்தார் என கூறப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரின் முதல் பக்கத்தில் பிரவீன் இருந்தார் என கூறப்படவில்லை. இரண்டாவது பக்கத்தில் பிரவீன் இருந்தார் என கூறப்பட்டுள்ளது. புகாரில், 2ம் எதிரி துரைப்பாண்டி பெயர் கூறப்படவில்லை. இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிலிருந்து இளநீர் கடைக்கு LGB ரோட்டின் வழியாகவும், பைபாஸ் ரோட்டின் வழியாகவும் வரமுடியும் என்றால் சரியல்ல. குறுக்குசாலைகள் நிறைய உள்ளன. சம்பவத்தன்று கொரோனா பொதுமுடக்கம் விலக்கப்படவில்லை என்றால் சற்று தளர்வு இருந்தது. அத்தியாவசியப்பொருட்கள் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். காவல்துறையிலிருந்து முக்கிய இடங்களில் சோதனை சாவடி அமைத்து, கண்காணிப்பு பணி செய்யப்பட்டுக்கொண்டிருந்தது என்றால் சரியல்ல. இரவு 9.00 மணிக்கு மேல் வெளியே நடமாடுவதற்கு அனுமதியில்லை என்றால் சரியல்ல. சற்று தளர்வு இருந்தது. இரவு 9.00 மணிக்கு மேல் அனுமதியில்லாமல் பொதுமக்கள் வெளியில் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 17.09.2020 அன்று இரவு சண்டை நடந்த விவரம் எனக்கு சாட்சிகள் பிரவீன், கார்த்திக் ஆகியோரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்த 19.09.2020 அன்றுதான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். சாட்சிகள் பிரவீன், கார்த்திக் ஆகியோரின் வாக்குமூலங்கள் 21.09.2020 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலங்களின் அடிப்படையில் சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன். புகாரில், அஜீத்குமார் பெயர் குறிப்பிடப்பட்ட விவரம் எனக்கு தெரியும். அஜீத்குமார் என்பவரை நான் எப்போது விசாரித்தேன்

என்றால் 23.09.2020 அன்று விசாரித்தேன். அஜீத்குமாரின் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு 21.12.2020 அன்று அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 21.12.2020 அன்று காவல்துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அஜீத்குமாரை நான் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றும், அவரை விசாரித்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், வழக்கிற்காக பின்னிட்டு அவரது வாக்குமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 19.09.2020 அன்று நான் அனுப்பிய சட்டமாறுதல் அறிக்கையில் அஜீத்குமாரை வழக்கிலிருந்து நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அஜீத்குமாரை வழக்கிலிருந்து நீக்குவதற்கு, நீக்கல் அறிக்கையை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் அவ்வாறு 19.09.2020 அன்று அஜீத்குமார் என்பவரை நீக்கம் செய்து, நீக்கல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

01.10.2020 அன்று நான் இரண்டாவது சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.52 அனுப்பியுள்ளேன். அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ராஜன் (எ) வெள்ளப்பாண்டியை இவ்வழக்கில் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. அவர் கடையில் வேலைபார்த்த சசிதரன் என்பவரை சாட்சியாக சேர்த்துள்ளேன். ராஜன் (எ) வெள்ளப்பாண்டி கடையில் சசிதரன் என்பவர் வேலைபார்த்தார் என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1, 2, 3 எதிரிகளுக்கிடையே எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. 3 வது எதிரி சிவகங்கை ஆராவயலை சேர்ந்தவர். 2 வது எதிரி பழைய பஸ்டாண்டு பகுதியை சேர்ந்தவர். 17.09.2020 அன்று எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன கிருஷ்ணமூர்த்திக்கும், 2, 3 எதிரிகளுக்கும், எந்தவித முன்விரோதமும் கிடையாது என்றால் சரியல்ல. TN 38 AE 4282 Hero honda CD Delux வாகனத்தின் உரிமையாளர் யாரென்று நான் விசாரிக்கவில்லை. மேற்படி வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து, சாட்சியாக சேர்த்தால், இவ்வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் அவரை விசாரிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. 8 ம் எதிரிக்கும், 3 வது எதிரிக்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. 8 ம் எதிரியின் செல்போன் .....

எண்ணை தெரிந்து, அந்த எண்ணிற்குரிய அழைப்பு விவரங்களை சேகரிக்கவில்லை. 8ம் எதிரிக்கும், மற்ற எதிரிக்கும் தொடர்பில்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் அதை நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும், 6வது எதிரிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. 6ம் எதிரியின் செல்போன் எண் மற்றும் அந்த எண்ணிற்குரிய அழைப்பு விவரங்களை நான் கைப்பற்றவில்லை. அந்த விவரம் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், எதிரிகள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் நான் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் எதிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தார் என்ற விவரம் 22.09.2020 அன்று எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். 3ம் எதிரி காயமடைந்தது சம்மந்தமாக நான் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அவர் சிகிச்சை எடுத்த ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். 17.09.2020 அன்று நடந்த சம்பவத்தில் சாட்சிகளை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், இவ்வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அந்த சம்பவம் பற்றிய விசாரணை ஆவணங்களை மறைக்கப்பட்டுவிட்டன என்றால் சரியல்ல. அந்த சம்பவம் பற்றிய ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தால், இவ்வழக்கு எதிரிகளுக்கும், சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என தெரிந்துவிடும் என்பதால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. 17.09.2020 அன்று இரவு 8.45 மணியளவில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்றே, புகாரில் குறிப்பிட்டுள்ள இரு நபர்களில் ஒருவரை நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் முறையாக புலன்விசாரணை செய்யவில்லை .........

என்றும், அதனால்தான் எதிரிகளை இவ்வழக்கில் உண்மைக்கு புறம்பாக சேர்த்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தப்பட்ட நபர்கள் யார், யார் என்று பெயர் குறிப்பிடப்பட்டு, பத்திரிக்கையில் செய்தி வெளியான காரணத்தினால், எதிரிகள் நீதிமன்றத்தில் சரணடைந்தார்கள் என்றால் சரியல்ல. 1, 2, 4 எதிரிகள் சிவகங்கை நீதிமன்றத்தில் சரண்டரானார்கள். அவர்களை நீதிமன்றக்காவலிலிருந்து போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். இவ்வழக்கில் உண்மையான எதிரிகள் தெரியாத நிலையில், ஆஜர் எதிரிகளின் பெயர் காவல்நிலையத்திலிருந்து விளம்பரப்படுத்தப்பட்டதால், எதிரிகள் தங்கள் உயிர், உடமைக்கு பாதுகாப்பு வேண்டும் என்பதால் நீதிமன்றத்தில் சரணடைந்தார்கள் என்றும், அதன்பிறகு எதிரிகளை காவலுக்கு எடுத்து ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றதல் மகஜர், வழக்குச்சொத்துக்கள் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள், சான்று பொருட்கள் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவைகளுக்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

அ.சா.3 பிரவீன், அ.சா.10 கார்த்திக் ஆகியோர் 17.09.2020 அன்று இரவு எந்த இடத்திலும் நடந்து செல்லவில்லை என்றும், ஆஜர் எதிரிகள் கூட்டமாக கூடி நின்று சதி ஆலோசனை செய்யவில்லை என்றும், அந்த சம்பவம் வழக்கிற்காக சித்தரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. கொரோனா பொதுமுடக்கத்தின் காரணமாக இரவு நேரங்களில் வீட்டை விட்டு யாரும் வெளியே வரக்கூடாது என்ற முடக்கம் இருந்தது என்றும், கண்காணிப்பும் இருந்தது என்றும் சொன்னால் சற்று தளர்வு இருந்தது. சம்பவ காலத்தில் 144 தடை இருந்தது என்றால் சரிதான். தடை உத்தரவை மீறி, கும்பலாக நின்றுக்கொண்டிருந்தார்கள் என்று வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சதி நடந்த இடத்தில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவங்கள்

கற்பனையானது என்றும், உயரதிகாரிகளின் ஆலோசனையின்பேரில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு ஏற்றவாறு வாக்குமூலங்கள் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் *1* மற்றும் *4* எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.